1987 மே 7]

[முற்பகல் 10-10.]

(உ) பட்டினப்பாக்கம் அரசு அலுவலர் குடியிருப்புகளைச் சீர் செய்யும் பணி.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' பட்டினப்பாக்கம் அரசு அலுவலர் குடியிருப்பில் அரசால் கட்டப்பட்ட குடியிருப்புகள் இடிந்து மோசமான நிலையில் இருப்பதாலும், அது சரியான முறையில் பராமரிக்கப்படாததாலும், அங்கு வாழும் மக்களுக்கு எந்த நேரத்திலும் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலை உள்ளது குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறி துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இதுவரை பட்டினப்பாக்கத்தில் 1,172 குடியிருப்புகள் அரசு அலுவலர் வாடகை குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டி முடித்துள்ளது. இதில் 668 குடியிருப்புகள் 1958-ஆம் ஆண்டும், 42 குடியிருப்புகள் 1960-ஆம் ஆண்டும், 112 குடியிருப்புகள் 1972-ஆம் ஆண்டும், 290 குடியிருப்புகள் (ஏற்கெனவே கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கு மேல் இரண்டாம் தளமாக கட்டப்பட்டுள்ளது) 1974-ஆம் ஆண்டும் மற்றும் 60 குடியிருப்புகள் 1986-ஆம் ஆண்டும் கட்டப்பட்டன.

2. இத்திட்டம் கடலோரத்தில் அமைந்துள்ளதால் கடலின் உப்புக் காற்றாலும், குடியிருப்புகளில் உபயோகிக்கப்படும் நிலத்தடி நீரின் அரிப்புத் தன்மையாலும் சுவற்றின் சிமெண்டு அதிகமாக பாதித்து பூச்சு விழுந்துவிட ஏதுவாகிறது. இரும்பு கம்பிகளில் அரிப்பு ஏற்படுதலும் மற்றும் சாளர விதானத்தில் வளைவு ஏற்படுவது ஆகியவை ஏற்பட்டுள்ளது. கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள சிதைவை சீர் செய்ய 1985-ஆம் ஆண்டில் ரூபாய் 15.96 இலட்சம் மதிப்பீட்டிற்கு அரசு ஏற்பளிப்பு வழங்கியது. அதன் பின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு சீர் செய்யும் பணிகள் துவங்கப்பட்டு தற்பொழுது நடைபெற்று வருகிறது. சுமார் 40 விழுக்காடு வேலைகள் முடிந்துள்ளன. எல்லாவித பழுதுபார்ப்பு வேலைகளும் ஏப்ரல் 1987-க்குள் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் 40 விழுக்காடு பணிகள் நடந்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றையதினம் நடந்த மானியக் கோரிக்கையில் கூட அது பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணி செய்கிற பொழுது நிரந்தரமான பரிகாரம் காண முடியாது. சில வருடங்களுக்கு மட்டுமே ரூபாய் 15 இலட்சம் என்று செலவழிக்கும் போது அரசுக்கு ஏகப்பட்ட நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அதற்குச் சரியான முறையில் தீர்வு காண்பதற்கு நிரந்தரமாக ஏதாவது வழி உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது போல ஏறக்குறைய ரூபாய் 16 இலட்சம் ரிப்பேர் செய்வதற்காக அரசால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதிலேதான் 40 சதவீதம் வேலைகள் முடிந்திருக்கின்றன; மீதி வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன; அடுத்த மாதத்திற்குள்ளாக வேலைகள் முடிந்துவிடும்—ரிப்பேருக்காக மட்டும் ஒதுக்கப்பட்ட தொகையைத் தவிர, வேறு பணிகளும் அவ்வப்போது செய்யப்படுகின்றன. நிரந்தரமாகப் பரிகாரம் என்றால், அதை இடித்துவிட்டு வேறு கட்டினால்தான் நிரந்தரமான பரிகாரமாக இருக்கும். அது குறித்து, இப்பொழுது ஏதும் செயற்குறிப்பு அரசிடத்திலே இல்லை. இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற பழுதுகளை முழுமையாகச் சீர் பார்த்து அதைச் சரிப்படுத்தித் தர அரசு வேண்டிய நிதியை ஒதுக்கி வீட்டு வசதி வாரியத்திற்கு அறிவுறுத்தி அந்தப் பணிகளைச் செய்யும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீடுகள் எல்லாம் 1958 ஆம் வருடத்திலேயிருந்து 1974 ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட வீடுகள். ஆக, பல வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகளாக இருக்கிற காரணத்தால் அமைச்சர் சொன்னதைப் போலவே அங்கே இருப்பவர்களை வேறிடத்திற்கு மாற்றிவிட்டு, அவற்றை இடித்துவிட்டு, புது வீடுகளை வரும் ஆண்டிலாவது கட்டுவதற்கு அரசு முயற்சிக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே அரசு ஊழியர்களுக்கான வாடகைக் குடியிருப்பு 3 இடங்களில்தான் இருக்கின்றன. எனவே, உடனடியாக இடிக்கின்ற பிரச்சினை இப்பொழுது இல்லை. தேவையை முன்னிட்டு மேற்கொண்டும் குடியிருப்புகளைக் கட்ட அரசு முயற்சிக்கும்.

(ஊ) தொழிற்பேட்டை குடியிருப்புகளைத் தொழிலாளர்க்கே சொந்தமாக்குதல்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு தொழிற்பேட்டை குடியிருப்புக்களை தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்கி தரப்படும் என்று அறிவிக்கப்பட்டும் இன்னும் அமுல்படுத்தாததால்